வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

மாருதி
MARUTHI MONEY EXCHANGE
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 13.06.2024 வியாழக்கிழமை | இதழ் : 165 | பக்கங்கள் : 12

# 13ஆவது திருத்தச் சட்டம் எமது பிரச்னைக்கு தீர்வல்ல!

## தன்னை சந்தித்த சஜித்திடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

**தமிழ் மக்களின் பிரச்னைக்கு 13ஆவது திருத்தச் சட்டம் இறுதித் தீர்வல்ல. தற்போதுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. ஒற்றையாட்சி முறைமை கொண்ட அரசமைப்பை ஏற்பதற்கு தமிழ்மக்கள் தயாராக இல்லை - இவ்வாறு நேற்று தன்னை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி.விக்னேஸ்வரன்.**

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்றைய தினம் விக்னேஸ்வரன் எம். பியை அவரின் இல்லத்துக்கு தேடிச் சென்று சந்தித்தார்.

இதன்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்று வாக்குறுதி அளித்தார். அவருக்கு பதிலளித்த விக்னேஸ்வரன் எம். பி.,

13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்னைக்கு இறுதியான தீர்வு அல்ல. அது 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப் பட்ட சட்டம். இதில், வழங்கப்பட்ட அதிகாரங்கள் - உரிமைகள் பலவற்றை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டுவிட்டது.

11





## வலய பணிமனைகள் முன்பாக ஆசிரியர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்தின் சகல வலய கல்வி பணிமனைகள் முன்பாகவும் அதிபர், ஆசிரியர்கள் நேற்று புதன்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும், இலவச கல்வியை தனியார் மயமாக்க வேண்டாம், மாணவர்களின் போசாக்கை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நாடாளவிய ரீதியில் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம்,

11

## அனலைதீவு மீனவர்கள் தமிழகத்தில் ஒதுங்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அனலைதீவில் இருந்து கடற்றொழிலுக்கு சென்றபோது காணாமல் போயிருந்த மீனவர்கள் இருவரும் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இவர்கள் சென்ற படகின் இயந்திரம் பழுதடைந்தமையால் தமிழ்நாட்டின் நாகபட்டினம் பகுதியில் கரையொதுங்கினர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

அனலைதீவை சேர்ந்த திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ, நாகலிங்கம் விஜயகுமார் ஆகியோரே இவ்வாறு கரையெதுங்கினர்.

இருவரும் அனலைதீவிலிருந்து கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் தமது படகில் கடற்றொழிலுக்கு சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தனர் என்று அவர்களின் குடும்பத்தினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

## ஈஸ்டர் தாக்குதலில் உளவுத்துறை; விசாரணை நடத்த குழு நியமனம்!

கொழும்பு, ஜூன் 13

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வு தகவல் குறித்து அரச புலனாய்வு சேவை, தேசிய புலனாய்வு பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ. என். டி. அல்விஸ் தலைமையிலான குழு ஒன்றை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியர சர் ஏ. என். ஜே. டி. அல்விஸ் தலைமையிலான இந்தக்

11

## டிப்பர் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 13

வீதியில் நடந்து சென்ற இளம் குடும்பஸ்தரை டிப்பர் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஏ-9 வீதியில் - தென்மராட்சியின் நுணாவில் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை 4.30

11

## போர் முடிந்து 15 வருடங்கள் கடந்தும் வடக்கு அபிவிருத்தி அடையவில்லை

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

"யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார, சமூக மற்றும் வாழ்வாதார பரப்புகளில் சாதகமான முன்னேற்றத்தை அடையவில்லை. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றைய தினம் நீர்வேலி அத்தியார் இந்து, சுழிபுரம் விக்ரோறியா, காரைநகர் யாழ்ரன்

11

## இளம் மருத்துவர் சடலமாக மீட்பு!

வடமராட்சி, ஜூன் 13

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை விடுதியிலிருந்து மருத்துவர் ஒருவரின் சடலம் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே மருத் துவமனையின் பெண் நோயியல் மருத்துவரான திருநெல்வேலியை சேர்ந்த பிரேமானந்தராசா கிரிஷாந் (வயது 30) என்பவராவார்.

விடுதியில் தங்கியிருந்தவரை

11

## நாட்டின் எதிர்காலத்துக்கு ஜனாதிபதி தேர்தல் முக்கியம்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எனது தனிப்பட்ட வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படாது. மாறாக நாட்டின் வெற்றி, தோல்வியே தீர்மானிக்கப்படும் - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்ற திருப்தி மக்களுக்கு இருக்குமாயின் அந்த வேலைத் திட்டத்துடன் முன்னேறி செல்ல முடியும். அவ்வாறு இல்லாவிட்டால், நாட்டு மக்கள் மீண்டும்

11

## பொது வேட்பாளர் மூலமாக பேரம் பேசும் சக்தி கிட்டும்!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

பாரிஸ், ஜூன் 13

பொதுவேட்பாளருக்கு நான் முழுமையாக ஆதரவளிக்கிறேன். இதனால் பேரம் பேசும் சக்தி எங்களுக்கு கிடைக்கும் - இவ்வாறு பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

தமிழ் மக்கள் மத்தியில் சிவில் சமூகம் பலமான சக்தியாக மாறவேண்டும். அவர்கள் அரசியலில்

11

## 15 முக்கிய சட்டங்கள் விரைவில் நிறைவேறும்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் வாரங்களில் மிக முக்கியமான 15 சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

“தமிழ் பொது வேட்பாளரை இலங்கை தமிழ் அரசு கட்சி ஆதரிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக நான் பிரசாரம் செய்வேன்”.

மேற்கண்டவாறு கூறியிருப்பவர் யார் என்பது நேற்றைய ஈழநாடு பத்திரிகையை படித்தவர்களுக்குத் தெரியும் என்பதால் மற்றையவர்களுக்கு தெரியாது என்பதல்ல. இப்படி சொல்லக்கூடியவர் யார் என்பது நமக்கெல்லாம் தெரிந்தது தான்.

கட்சித் தலைவர் தேர்தலில் இத்தனை பேர்தான் வாக்களிக்க இருக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டே தேர்தல் நடத்த அனுமதியளித்துவிட்டு தான் வெற்றி பெறவில்லை என்றதும் அந்தத் தேர்தலே தவறானது என்று பகிரங்கக் கடிதம் எழுதியவர் அவர். அந்தத் தேர்தலில் தான் வெற்றி பெறாவிட்டாலும் இப்போதும் தானே தலைவர் என்று கருதி செயல்படுபவரும் அவர்தான். இது எல்லாம் அவர்கள் கட்சி உள்வீட்டு சமாச்சாரம்.

தமிழ் பொதுவேட்பாளரை எதிர்ப்பதற்கு அவர் சொன்ன காரணம் என்ன என்பதும் ஈழநாடு வாசகர்களுக்கு தெரிந்ததுதான். சமஷ்டிக்கான மக்கள் ஆணையை கடந்த ஏழு தசாப்தங்களாக மக்கள் வழங்கிக்கொண்டுதானே இருக்கிறார்கள். அதற்கு பிறகு எதற்கு இந்த விஷப்பரீட்சை?. மக்கள் அவர் சொல்வதுபோல சமஷ்டி கோரிக்கைக்காகத்தான் அவர்களுக்கு இதுவரை வாக்களித்தார்கள் என்றால், இன்னுமொரு தேர்தலிலும் அவர்கள் சமஷ்டிக்காக வாக்களிக்க மாட்டார்கள் என்று அஞ்சுவதும் அதனை விஷப்பரீட்சை என்று சொல்வதும் எதனால் என்பதுதான் தெரியவில்லை. அதனால், அதனை தோற்கடிப்பதற்காகத்தான் பிரசாரம் செய்வேன் என்றும் தான் நடத்திய பகிரங்க மேடையில் அவர் சவால் விட்டது நமக்கு தெரிந்ததுதான்.

கடந்த தேர்தலில்தான் வெற்றி பெறுவதற்காகவே வேறு சிலரின் உதவியை நாடிய அவர், இந்த பொது வேட்பாளரை தோற்கடிப்பதற்கான பிரசாரத்துக்கு யாரின் உதவியை நாடுகின்றார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

அதுவல்ல, நாம் இன்று இந்தப் பத்தியில் சொல்ல வருவது.

அண்மையில், ஈழநாடு - டான் ரீ.வி. பணிமனைக்கு வந்திருந்த அவர், எமது குழுமத் தலைவர் குகநாதனை சந்தித்து நீண்டநேரம் பேசியிருக்கிறார். இருவரும் பல நிமிட நேரம் நடத்திய இந்த சந்திப்பில், இன்றைய நிலையில் அவர் மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும் பதின்மூன்றை அமுல்படுத்துவதாக கூறுவதால் அதனை நடைமுறையில் இப்போதே காட்டுவதற்கு ஏதுவாக நீங்கள் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று குகநாதன் விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறாராம்.

இன்றைய நிலையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள மூன்று வேட்பாளர்களுமே பதின்மூன்றை முழுமையாக (சிலர் பொலிஸ் அதிகாரம் இல்லாமல்) அமுல்படுத்துவதாக கூறுகின்றனர். இதற்காக, நாங்கள் அவர்கள் தேர்தலில் வெற்றி பெறும் வரை காத்திருக்கவேண்டும். ஆனால், அது முழுமையாக அமுல்படுத்துவதற்கு முன்னதாகவே, ஏற்கனவே இயங்கிய அதிகாரங்களுடன் அது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இயக்கப்படவேண்டும். அதற்காக மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மாகாண சபை தேர்தலை நடத்தப்போவதாக சஜித் பிரேமதாஸ உறுதியளித்திருக்கிறார்.

ஆனால், அப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் அனுமதி பெறப்படவேண்டும். இதற்காக ஏற்கனவே நமது சுமந்திரன் எம். பி. தாக்கல் செய்த தனிநபர் சட்டமூலம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, உயர்நீதிமன்றின் அனுமதியையும் பெற்றுவிட்டது. சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றலாம் என்றும் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் சொல்லிவிட்டது. அது பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்ததும் மாகாண சபைகளுக்கு யார் வேண்டுமானாலும் தேர்தல்களை நடத்தலாம்.

இந்த விடயத்தை சுமந்திரனிடம் சுட்டிக்காட்டிய குகநாதன் உங்கள் அந்த சட்டமூலத்தை பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுக்குமாறும் அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தி, அதனை பாராளுமன்றில் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சியுங்கள் என்றும் கோரிக்கை விடுத்ததாகவும் அதனை அவர் ஏற்றுக்கொண்டு நிச்சயம் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் அதனை செய்வோம் என்று உறுதியளித்தாகவும் நமது நிறுவனத் தலைவர் கூறினார்.

தான் இதுவரை அதனை பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுக்க தயங்குவது, அதனை தோற்கடித்து விடுவார்களோ என்பதால் தான் என்றும் சுமந்திரன் கூறியிருக்கிறார்.

தனது இரண்டு வருட ஆட்சியில் எழுபத்தி ஐந்து சட்டமூலங்களை நிறைவேற்றியுள்ளதாக பெருமைப்படும் ஜனாதிபதி இந்த சட்டமூலத்தையும் நிறைவேற்றுவதற்கு சம்மதிப்பார் என்றே நம்பலாம். இது ஒன்றும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தையோ, காணி அதிகாரத்தையோ வழங்கும் முயற்சியல்ல, கடந்த மூன்று தசாப்தங்களாக இயங்கிய அதே அதிகாரங்களுடன் மாகாண சபைகள் இயங்குவதற்காக தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலமே.

இதனை யாரும் எதிர்ப்பார்கள் என்று நம்புவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. அதிகம் ஏன்? தற்போதைய பாராளுமன்றத்தில் எம். பிக்களாக இருப்பவர்கள் பலர் அடுத்த தேர்தலுடன் வீட்டுக்கு போகப்போகின்றவர்கள்தான். அவர்களில் பலர் மாகாண சபைகளூடாக என்றாலும் அரசியலில் தொடர்வோம் என்று அந்த சட்டமூலத்துக்கு ஆதரவும் வழங்க முன்வரலாம்.

ஊர்க்குருவி.

## 41 நாட்களாக தொடரும் போராட்டம்: சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 13

41 நாட்களாகத் தொடரும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் காரணமாக 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தங்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரியத் தீர்வை முன்வைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிய வரிக்கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 13

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் மூன்று கட்டங்களின் கீழ் தீர்வை வரிக் கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு அரசாங்கங்களினாலும் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு கொள்கைகளுக்கு ஏற்ப தீர்வை வரிக் கொள்கை திருத்தியமைக்கப்படுவதால் நாட்டில் முதலீடுகளின் போட்டித்தன்மைக்கு பாதகமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய தீர்வை வரிக் கொள்கையொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த குழுவினர் வர்த்தக மற்றும் தொழில்துறையினருடன் கலந்துரையாடி இந்த தீர்வை வரிக் கொள்கையை தயாரித்துள்ளனர். (அ)

## குளவிகள் கொட்டியதில் 35 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 13

குளவி கொட்டுக்கு இலக்காகி 35 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - கெக்கிராவை பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 5 - 10 வயது வரையான மாணவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைக்கு அருகில் உள்ள குளவி கூடொன்று கலைந்தமையால் இந்த நிலைமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படடது.

குளவி கொட்டுக்கு உள்ளான மாணவர்களை காப்பாற்ற முயன்ற ஆசிரியர்களும் பெற்றோர் சிலரும் குளவி கொட்டியதால் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை குளவி தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சிகிச்சைக்காக கெக்கிராவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஒரு மாணவன் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## பாதாள குழுவின் 8 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 13

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 8 பேரை நேற்றுமுன்தினம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுவின் செயல்பாட்டை ஒடுக்க அமைக்கப்பட்ட 20 விசேட குழுக்களே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தன.

அத்துடன், பாதாள உலகக் குழுவினருக்கு உதவினர் என்ற சந்தேகத்தில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு 2, 8 பகுதிகளில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 36, 24 வயதுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

காலியில் ஒருவரும், மாத்தறை மாவட்டத்தில் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 1,576பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## நாகதம்பிரான் ஆலயத்தின் இராஜகோபுரத்துக்கு அடிக்கல்!

வடமராட்சி, ஜூன் 13

சரித்திர பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் பஞ்சதள இராஜகோபுரத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரை 1008 சங்கு ஸ்தாபனம் செய்யும் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பக்தர்கள் அனைவரும் பங்கேற்க முடியும்.

இதேநேரம், அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூசைகள் ஆரம்பமாகும். (ஐ- 02)

## நீரில் மூழ்கி குழந்தை பலி!

பொத்துவில், ஜூன் 13

அம்பாறை, பொத்துவில் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் குழந்தை ஒன்று நீர் நிரம்பிய வாளியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த இரட்டை குழந்தைகளில் ஒரு குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

உயிரிழந்த குழந்தையின் தந்தை வேலைக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது, உயிரிழந்த குழந்தையின் தாய், குழந்தையை குளிப்பாட்டுவதற்காக வீட்டின் பின்புறத்துக்கு கொண்டு சென்று வாளி ஒன்றில் நீரை நிரப்பிவிட்டு குழந்தையை அவ்வாளிக்கு அருகில் வைத்துவிட்டு சவர்க்காரம் எடுப்பதற்காக வீட்டுக்குள் சென்றுள்ளார்.

இதன்போது, வீட்டுக்குள் இருந்த மற்றைய குழந்தையின் அழுகுரல் கேட்ட நிலையில் அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு மீண்டும் வீட்டின் பின்புறத்துக்குச் சென்ற தாயார், நீர் நிரப்பப்பட்ட வாளிக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த குழந்தை வாளிக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கிய நிலையில் கண்டுள்ளார்.

இதனையடுத்து தாயார் குழந்தையை பொத்துவில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.06.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சியின் தலைமை யாரிடம்?

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சி முடிவு செய்துள்ளதாக எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் சிவஞானம் சிறீதரன் தமிழ் பொது வேட்பாளர்தான் தங்களுடைய நிலைப்பாடு என்று தெரிவித்திருக்கின்றார். இருவரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான். ஆனால், சுமந்திரன் ஆணித்தரமாக தமிழ் அரசு கட்சி முடிவெடுத்துள்ளதாக கூறுகின்றார்.

இதன் மூலம் என்ன விடயத்தை சுமந்திரன் நிறுவ முற்படுகின்றார்? - அதாவது, இப்போதும் நான் நினைத்ததே தமிழ் அரசு கட்சிக்குள் நிகழும், அதனை எவரும் மாற்றிவிட முடியாது. ஆனால், தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்லும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் தலையசைக்கின்றார் அதேவேளை, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிரான கூட்டத்திலும் முன் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார். விசித்திரமான தலைவர்.

'மக்கள் மனு' வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு ஒழுங்கு செய்திருந்த கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போது, தமிழ் அரசு கட்சியின் இறுதி முடிவை சொல்வதற்கு கட்சியின் தலைவர் என்னும் வகையில், மாவை சேனாதிராசா இரண்டு வார அவகாசம் கோரியிருந்தார். அதன் பின்னர் சிவில் சமூக பிரதிநிதிகள் மாவை சேனாதிராசாவை உத்தியோகபூர்வமாக சந்தித்து பேசியிருந்தனர்.

அப்போதும் இரண்டு வாரங்கள் தொடர்பிலேயே மாவை குறிப்பிட்டிருந்தார். ஆனால், இன்றுவரையில் கட்சியின் முடிவை சொல்லவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழ் அரசு கட்சி பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பதென்று முடிவெடுத்துள்ளதாக சுமந்திரன் கூறுகின்றார். மாவை சேனாதிராசா ஒரு பலவீனமான தலைமைத்துவத்தை வழங்கிவருகின்றார் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும்கூட, இந்தளவு கையறு நிலையில் இருக்கின்றார் என்பது இப்போதுதான் தெரிகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்யப் போவதாக சுமந்திரன் கூறுகின்றார். இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கும் நிலைப்பாடுடைய தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்ன செய்யப் போகின்றனர்? அவர்கள் ஆதரவான பிரசாரங்களை முன்னெடுப்பார்களா? சுமந்திரன் ஒருவேளை கட்சியின் பெயரால் அவ்வாறான நிலைப்பாட்டை முன்னெடுக்க முற்பட்டால் அதனைத் தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு ஆதரிப்போருக்கு உண்டல்லவா?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிலைமையோ மேய்ப்பன் இல்லாத ஆட்டுக் கூட்டம் போன்றாகிவிட்டது. இந்த நிலையில் அனைவரையும் மேய்க்கும் ஆற்றல் தனக்கு மட்டுமே உண்டு என்னும் வகையிலேயே சுமந்திரன் செயல்பட்டு வருகின்றார். சுமந்திரனின் இலக்கு தெளிவானது. அதாவது, மீண்டும் கட்சியின் புதிய தலைமைக்கான தேர்தல் நடைபெறும்போது பிடித்தெழுவதற்கு ஒரு துருப்புச்சீட்டு தேவை. சுமந்திரனை பொறுத்தவரையில் தமிழ் பொது வேட்பாளர்தான் அந்தத் துருப்புச்சீட்டு. இப்போதும் தமிழ் அரசு கட்சி தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கின்றது என்பதை நிரூபிக்க வேண்டுமாயின், சிறீதரன் ஆதரிப்பதை பலமாக எதிர்த்து தோற்கடிக்க வேண்டும். இதனை சிறீதரன் புரிந்துகொள்கின்றாரா?

## ஓ.எல். பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜுன் 13

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் நேற்று பிற்பகல் 01 மணிக்கு பின்னர் இடைநிறுத்தப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாதாரண தர பரீட்சை விடைத் தாள்களை திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படும் 101 மத்திய நிலையங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள 100 வலய கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு முன்பாக நேற்று பிற்பகல் 01 மணிக்கு அதிபர் - ஆசிரியர் போராட்டம் பாரியளவில் நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்குதல், கல்வி சுமையை பெற்றோர் மீது சுமத்துவதை உடனடியாக நிறுத்துதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டமை அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சம்பளப் பிரச்னைக்கு தீர்வு கோரி அதிபர் - ஆசிரியர்கள் போராட்டம்

கொழும்பு, ஜுன் 13

சம்பளப் பிரச்னைக்கு தீர்வு வழங்குமாறு கோரி அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினர்கள் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

சம்பளப் பிரச்னைக்கு தீர்வு வழங்குமாறு பல சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்தாலும் இதுவரையில் அதற்கான உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதற்கு தீர்வாக பல பரிந்துரைகள் கல்வி அமைச்சின் குழுவொன்றினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

## இலங்கை - மலேசியா சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு அனுமதி

கொழும்பு, ஜுன் 13

இலங்கை மலேசியா சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான மேலதிக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளப் பெறுவதற்காக, ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இதற்கு, வலுவான மற்றும் மூலோபாய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுடன் பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது இலங்கைக்கு இன்றியமையாதது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆசியா மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தின் முக்கிய அங்கத்துவ நாடான மலேஷியா இலங்கையின் 34வது ஏற்றுமதி இலக்காகும் மற்றும் 2013 இல் மொத்த ஏற்றுமதியின் பெறுமதி 58.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இதன்படி இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முட்டையின் விலை குறையும்


கொழும்பு, ஜுன் 13

எதிர்காலத்தில் முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 45 வரை குறைக்க முடியும் என உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் அதிகப்படியான முட்டை உற்பத்தி கிடைப்பதால் முட்டையின் விலை மேலும் குறையும் என அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை முட்டை சந்தையில் 35 ரூபாய் முதல் 48 ரூபாய் வரை முட்டையை நுகர்வோர் வாங்குகின்றனர் என்றும் முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபம்**

எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்கள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். முன்னேறும் நாள்.

**கடகம்**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். அவசர முடிவுகளை இன்றைய நாளில் தவிர்ப்பது மிக மிக நல்லது.

**கன்னி**

கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**துலாம்**

ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புது முயற்சிகள் பலிதமாகும். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள்.

**தனுசு**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும்.

**மீனம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

# மாநில உரிமையை பறிகொடுப்பதுதான் திராவிட மொடல் அரசின் சாதனையா?



சென்னை, ஜூன் 13

தமிழகத்துக்கான காவிரி நீரை பெறாமல் டெல்டா விவசாயிகளுக்கு தி. மு. க. அரசு இழைத்திருக்கும் நம்பிக்கைத் துரோகம் மன்னிக்க முடியாத குற்றம். கூட்டணி தர்மத்துக்காகவும், சுய நலத்துக்காகவும் மாநில உரிமையை பறிகொடுப்பது தான் திராவிட மாடல் அரசின் சாதனையா? என்று அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் ரி. ரி. வி. தினகரன் விமர்சித்துள்ளார்.

# "அண்ணாமலை ஆடு பலி"

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை



சென்னை, ஜூன் 13

பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை படத்துடன் ஆட்டை வெட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணியும் பா. ஜ. க. உறுப்பினருமான ஏ. மோகன் தாஸ், இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். பாராளுமன்றத் தேர்தலில் கோவை தொகுதியில் போட்டியிட்ட அண்ணாமலை தோல்வியடைந்தார்.

இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப் பட்டணம் அருகே ஆடு ஒன்றின் கழுத்தில், மாநில பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை படத்தை அணிவித்து, ஆட்டை இழுத்து வந்து அதன் தலையை வெட்டி ஹஅண்ணாமலை ஆடு பலி " என, சிலர் கோஷமிட்டனர். அவர்கள் தி. மு. கவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பான வீடியோ பதிவு, சமூக வலைத்தளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

எனவே, இந்தச் செயலில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- இவ்வாறு தனது மனுவில் முறைப்பாட்டாளர் மோகன் தாஸ் குறிப்பிட்டுள்ளார். (எ)

# குழந்தைத் தொழிலாளர் இல்லாத எதிர்காலமே எமக்கு பொற்காலம்

## தமிழக முதலமைச்சர் தெரிவிப்பு




சென்னை, ஜூன் 13

குழந்தைத் தொழிலாளர் இல்லாத எதிர்காலமே, தமிழகத்துக்கு பொற்காலம் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஜூன் 12 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்ல குடிமக்களாக உருவாக வேண்டிய குழந்தைகள், குழந்தைப் பருவத்திலேயே தொழிலாளர்களாக மாறுவதால் ஒரு நாடு தனது சமூக வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், அமைதி, சமூகத்தின் சமச்சீர் தன்மை மற்றும் ஆற்றல்மிக்க மனித வளத்தையும் இழக்க நேரிடுகிறது.

பிஞ்சு குழந்தைகளை, குழந்தைத் தொழிலாளர் முறை என்ற கொடுமையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவம், முறையான கல்வியை அளித்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதே தமிழக அரசின் அடிப்படை நோக்கமாகும்- என்றார். (எ)



# தீ விபத்தில் 35 பேர் பலி

சென்னை, ஜூன் 13

தெற்கு குவைத்தில் மங்காப் நகரில் குடியிருப்பு கட்டடத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 35 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு அரசு ஊடகம் நேற்றுப் புதன்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் நான்கு இந்தியர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் இருவர் தமிழகம் மற்றும் வட இந்தியாவை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தி. மு. கவை வெற்றி பெற செய்வோம்



சென்னை, ஜூன் 13

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி. மு. க. வேட்பாளரை மாபெரும் வெற்றி பெறச் செய்வோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் ரா. முத்தரசன் தெரிவித்தார்.

தமிழ்நாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 2021 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் உடல் நலக்குறைவால் காலமானார். இதனைத் தொடர்ந்து இந்தத் தொகுதிக்கான இடைத் தேர்தல் 7 ஆம் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொது வேட்பாளருக்கே எங்கள் கட்சி ஆதரவளிக்கும்


## அநுரவுக்கு தெரிவித்தார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 13

**எங்கள் கட்சியின் ஆதரவு தமிழ் பொது வேட்பாளருக்கே என்று தம்மை சந்தித்த அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினரிடம் தெரிவித்துள்ளார் புளொட் கட்சியின் தலைவரான த. சித்தார்த்தன் எம். பி. யாழ்ப்பாணம் வந்துள்ள அநுர குமார தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சித்தார்த்தன் எம். பியை அவரின் இல்லத்தில் சந்தித்து பேசினர்.**

சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பில்,


"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக அதாவது அதிகார பரவலாக்கல் தொடர்பாக தங்கள் கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே, அதிகார பரவாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக ஜே.வி.பி கட்சி செயல்பட்ட விடயத்தில் எமது மக்கள் மத்தியில் இன்று வரை அதிருப்தியில் உள்ளனர். எனினும், எமது மக்களின் பிரச்னைத் தீர்வில் உறுதியான நிலைப்பாட்டிடை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படலாம்", என்று சித்தார்த்தன் கூறினார்.




இதேநேரத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம். சமூக மட்ட அமைப்புகளும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயல்படுவோம் - என்றும் தேசிய மக்கள் சக்தியினரிடம் தெரிவித்தார்.

(ஐ)





வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீபு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் நேற்று முன்தினம் இரவு முத்துச்சப்பரத்தில் எழுந்தருளி அம்பாள் பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சி...!

# மீனவர் இருவரை காணவில்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 13

அனலைதீவிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடற்றொழிலுக்கு சென்ற இருவரை காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமரசிங்கம் மற்றும் கேதீஸ்வரன் ஆகிய இருவரையே காணவில்லை. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. காணாமல் போனோரை கடலில் தேடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ)



# சைவ சமய தலைவர்களை சந்தித்தார் அநுரகுமார!

யாழ்ப்பாணம், ஜூன் 13

எந்தக் குற்றமும் செய்யாத குழந்தைகள், சிறுவர்கள் போரில் கொல்லப்பட்டனர். அவர்கள் உயிரிழந்து இத்தனை வருடங்களாகியும் எல்லோரும் இணைந்து இன்னமும் இனப் பிரச்னைக்கு தீர்வை வழங்க முடியவில்லையே என்று தம்மை சந்தித்த அநுரகுமார திஸநாயக்காவிடம் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர் சைவ சமயத் தலைவர்கள்.

யாழ்ப்பாணம் வந்த அநுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு சென்று குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் ஆசி பெற்றார். இதன்போது, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகனும் உடனிருந்தார்.


இதன்போது, நாட்டில் நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்னையை தீர்க்க ஜே. வி. பி. பங்காற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.


வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் நீடித்து செல்லும் நிலையில் அதற்கு தீர்வு என்ன என கோரிய போது எனது சகோதரியும் காணாமல் ஆக்கப்பட்டவர்தான். எனக்கு அதன் வலி தெரியும். நாம் ஆட்சிக்கு வந்து அதற்கொரு தீர்வை காண்போம் என்று அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை உள்ளிட்ட பல இடங்களில் சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலையில் அங்கு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணாமல் இந்த நாடு ஒருபோதும் முன்னேறாது என்று சைவ சமயத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

சமயத்தின் பெயரால் சண்டை பிடிக்கக்கூடாது. நாம் ஆட்சிக்கு வந்தால் கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உள்ள அழிவடைந்த ஆலயங்களை மீளவும் அமைக்க நடவடிக்கை எடுப்போம் என்று அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

(ஐ)





தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது...!

# 22 கிலோ கேரள கஞ்சா குருநகரில் சிக்கியது!

யாழ்ப்பாணம், ஜூன் 13

22 கிலோ கேரள கஞ்சாவை குருநகரில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாண பிராந்திய விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகரில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 10 பொதிக [illegible] கஞ்சா



கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# உள்நாட்டு உற்பத்திக்கு வடக்கின் பங்களிப்பை அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மேல் மாகாணம் 43.4%, வடமேல் மாகாணம் 11.2%, மத்திய மாகாணம் 10% என்றவாறு பங்களிப்பை வழங்கும் போது, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற 5 நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வட மாகாணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1% என்ற குறைந்தபட்ச பங்களிப்பையே வழங்கி வருகிறது. வடக்கின் பொருளாதார செயற்பாடுகள் பலவீனமான மட்டத்தில் இருப்பதே வட மாகாணத்தின் மிகக் குறைந்த பங்களிப்புக்கான காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.**



அத்துடன், வட மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த உத்தேச சர்வதேச கிரிக்கட் மைதானம் நிர்மாணிக்கப்படுவதோடு, வடக்கில் உள்ள 10 தொகுதிகளிலும், 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உற்பத்தி தொழில்களைக் கட்டியெழுப்பி, தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். புத்திஜீவிகளின் மையமாக வட மாகாணத்தை மாற்றியமைக்க வேண்டும். இதனை யதார்த்தமாக்க ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 233 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம், கோப்பாய், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கிற்கு வழங்கப்பட்ட சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு நல்லாட்சி அரசாங்கத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. வேலணை பிரதேசத்தில் உள்ள மண்டைதீவு மேற்கு பிரிவுக்கு சென்று அதன் தற்போதைய நிலைமையை ஆராய்ந்த போது, இம்மைதானத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்கனவே 50 ஏக்கர் இடப்பரப்பு ஒதுக்கப்பட்டிருந்தாலும், சர்வதேச கிரிக்கட் மைதானத்தை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மைதானத்தை அபிவிருத்தி செய்வதே வடக்கின் அபிவிருத்திக்கு சிறந்த வழியாகும்.

இந்த மைதானத்தை அரச மற்றும் தனியார் கூட்டாண்மையின் கீழ் ஒரு திட்டமாக முன்னெடுப்பதால் எளிதாக நிர்மாணிக்க முடியும். ஆர். பிரேமதாச மைதானம் கூட இவ்வாறு தான் நிர்மாணிக்கப்பட்டது. தனியார் முதலீட்டாளர்களின் உதவியுடன் ஆர். பிரேமதாச விளையாட்டரங்கம் நிர்மாணிக்கப்பட்டதைப் போன்று யாழ் மாவட்டத்திலும் சர்வதேச கிரிக்கெட் மைதானம் நிர்மாணிக்கப்படும். இது இந்தப் பகுதியின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், தொழில்களை மேம்படுத்தவும், சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் உதவும். அவ்வாறே, தேசிய பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்கவும் இது வழிகோலும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

எனவே யாழ்.மாவட்டத்தில் சர்வதேச கிரிக்கட் மைதான கனவை நனவாக்கும் வேலைத்திட்டம் அரச தனியார் கூட்டாண்மை திட்டமாக ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு உறுதியளித்தார். (அ)

# ஆசிரியர்களும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும் குறித்த விசேட உரை



யாழ்ப்பாணம், ஜூன் 13

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வில் நேற்று புதன்கிழமை காலை ஆசிரியரும் செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பமும் என்ற பொருளில் அதிதி உரை இடம்பெற்றது. கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் இந்த உரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவர் ஹலீம் இர்சாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர் உரையை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி பாருக் ஹஸ்நூறில்லா ஆற்றினார். சிறுவர் தொழிலாளர் பற்றி விவரணப் படமும் கலாசாலை ஆசிரிய மாணவரால் தயாரிக்கப்பட்டு சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை யொட்டி திரையிடப்பட்டது.



கலாசாலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவா அதிதிக்கான அறிமுகவுரையை ஆற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுறையாற்றினார். நிகழ்வுகள் யாவும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### உணவு ஒவ்வாமை;

# 25 மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜூன் 13


அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இன்று கல்வி கற்கும் 25 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பாடசாலையில் 3 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் அனைவரும் காலை உணவுக்காக நெத்தலி கருவாடு, வெண்டைக்காய் மற்றும் முருங்கைக் கீரை உள்ளிட்ட உணவு வகைகளை உட்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வுணவை உட்கொண்ட சிறிது நேரத்தில் அவர்களுக்கு உடல் முழுவதும் அரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இதனையடுத்து அனைத்து மாணவர்களையும் கஹட்டகஸ்திகிலிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சார்க் செயலாளருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சார்க் அமைப் பின் செயலாளர் நாயகம் கோலம் சர்வார்க்கும் இடை யிலான சந்திப் பொன்று நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற் றுள்ளது

அதன்படி சார்க் நாடுகளுக்கு இடையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சார்க் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கோரியுள்ளார்.

இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், சார்க் நாடுகளிடமிருந்து பெறக்கூடிய ஆதரவு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் நவீன கலைக்கான சார்க் கலாசார மையத்தை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அதிகாரிகள் குழுவொன்று கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை போக்குவரத்துச் சபையின் சிறந்த சாரதி சிறந்த பொறிவலவர் விருது பெற்றோருக்கான கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை ஊழியர் நலன்புரிச்சங்கம் நடத்திய ஆண்டுவிழா நிகழ்வில் இலங்கையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை நிலையில் சிறந்த சாரதிக்கான விருது பெற்ற கொலின் மற்றும் சிறந்த பொறிவலவருக்கான விருது பெற்ற பாலகிருஷ்ணவரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை போக்குவரத்துச்சபை யாழ் சாலை ஊழியர்களின் பிள்ளைகளாக இருந்து தரம் 05 பலமைப் பரிசில் சித்தி, க.பொ..த. சாதாரண தரம் சிறந்த பெறுபேறு உயர்தரம் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ் சாலை முகாமையாளர் என் குணசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக யாழ். பேருந்து நிலைய ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி என். லோகநாதனும் கௌரவ விருந்தினர்களாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் என். கேதீசனும் வடபிராந்திய செயலாற்றல் பிராந்திய முகாமையாளர் ஏ.ஜெ. லெம்பேட்டும் கலந்து கொண்டனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் நாட்டை மேலும் கடனுக்குள் தள்ளினார்!

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

**கடனில் இருந்து நாட்டை மீட்டுத்தருவதாக கூறி ஆட்சிக்குவந்த ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டை மேலும் கடன் சுமைக்குள் தள்ளியுள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2022 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இந்த நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து விட்டதாக மத்திய வங்கி ஆளுநர் அறிவித்திருந்தார்.

நாடு பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்த முடியாத அளவுக்கு நாட்டின் கடன் சுமை கடந்த காலத்தில் ஆட்சி செய்த தரப்புக்களால் அதிகரிக்கப்பட்டது.

83 ஆயிரம் மில்லியன் டொலர்கள் கடன் சுமையை தேசிய ரீதியாகவும் நாடு எதிர்கொண்டது. தொடர்ச்சியான கடன்சுமையால் நாடு பொருளாதார வங்குரோத்து அடைந்தது.

கடன் நெருக்கடிக்கு தீர்வாக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடியது. அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நாட்டிற்கு கடனுதவி கிடைக்கப்பெற்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் பல யோசனை திட்டங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் யோசனை திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இதனால் நாட்டு மக்கள் மேலும் நெருக்கடியை எதிர்கொண்டனர். வரி அதிகரிப்பு, மின்சார கட்டன அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம், சமையல் எரிவாயு விலையேற்றம் என அனைத்து நெருக்கடியையும் மக்களே எதிர்கொண்டனர்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை அரசாங்கம் மேற்கொண்டது. ஆனால் சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட எந்தவொரு கடன் தொகையினையும் இதுவரை மீள செலுத்தவில்லை.

கடனில் இருந்து நாட்டை மீட்டுத்தருவதாக கூறி ஆட்சிக்குவந்த ரணில் விக்ரமசிங்க இன்று நாட்டை மேலும் கடன்சுமைக்குள் தள்ளியுள்ளார்-என்றார்.

# தபால் ஊழியர்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 13

தபால் ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தனர்.

ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள் முற்றாக தடைப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் சேவை தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்கள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு ட்டநேற்று ஆறாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹேமச்சந்திர குணசிங்க கூறினார். (அ)

# சிறுமி தாக்கப்பட்ட காணொலியை வெளியிட்ட இளைஞருக்கு சன்மானம்!

கொழும்பு, ஜூன் 13

4 வயது சிறுமி தாக்கப்படும் காணொலியை சமூக ஊடகங்களில் பதிவிட்டார் என்று கூறப்படும் இளைஞருக்குப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் 5 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்பட்டது.

இந்த சன்மானம் வழங்கும் நிகழ்வு நுற்று புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

அண்மையில், வெலிஓயா பிரதேசத்தில் 4 வயது சிறுமி தாக்கப் பட்ட காணொலி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமியை தாக்கினார் என்று கூறப்படும் குசுல் சமிந்த என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தாக்குதலுக்குள்ளான சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# டெங்கு நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், கடந்த 10 நாட்களில் 971 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகக் குறித்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் கடந்த 10 நாட்களில் நாட்டில் பதிவான 971 நோயாளர்களில் அதிகமான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் என்றும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இதுவரையான காலப்பகுதிக்குள் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும், டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 18.7 வீதமானோர் பாடசாலைகளை அண்மித்துள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் நாடளாவிய ரீதியில் 14 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய விசேட குழு

கொழும்பு, ஜூன் 13

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

அந்தவகையில் குறித்த நிபுணர் குழுவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி செயலாளரும், சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தருமான உதய செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் குழுவில் பணிப்பாளர் நாயகமாக நான்கு உறுப்பினர்களும், மேலதிக உறுப்பினர்களாக நான்கு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

அத்தோடு, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜீ.எல். வெர்னன் பெரேரா குழுவின் செயலாளராக செயற்படுவார் எனவும் ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைப் பிரிவுகளுக்கிடையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் குறித்து கவனம் செலுத்துவதுடன், அரச சேவையின் அனைத்துத் துறைகளிலும் உள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்யவுள்ளது.

இதனையடுத்து, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை இந்த நிபுணர் குழு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இது தொடர்பான தமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு வழங்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஊர்காவற்றுறையில் மதுபானம் தேயிலை சாயமாக மாறிய சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நெடுந்தீவு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட மதுபானம், தேயிலை சாயமாக மாறியது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பகுதியில் அளவுக்கு அதிகமான மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரை நெடுந்தீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதன் போது, நெடுந்தீவு பொலிஸாரினால் சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்ட மதுபான போத்தல்கள் சீல் வைக்கப்பட்டு, சான்று பொருட்களாக மன்றில் ஒப்படைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது, தன் மீதான குற்றச்சாட்டினை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டதை, அடுத்து அவருக்கு தண்டம் விதித்த மன்று, நபர் ஒருவர் 10 மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருக்க முடியும் என்பதால், அவரிடம் இருந்து மீட்கப்பட்ட மதுபான போத்தல்களில் 10 போத்தல்களை மீள கையளிக்குமாறும் மேலதிக போத்தல்களை அழிக்குமாறும் மன்று உத்தரவிட்டது.

அதனை அடுத்து சான்று பொருளாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட மதுபான போத்தல்களில் 10 போத்தல்களை மீள அந்நபரிடம் ஒப்படைத்த போது, அவற்றில் சில போத்தல்களில் மதுபானத்தின் நிறம் மாறி இருந்ததுடன், அடியில் மண்டி படிந்த மாதிரி காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து அது தொடர்பில் நீதிமன்ற பதிவாளரிடம் முறையிட்டுள்ளார். பதிவாளர் எழுத்து மூல முறைப்பாட்டினை பெற்று, நீதவானின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து, நீதவானின் உத்தரவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சுற்றுலா வாகனங்கள் இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 13

சுற்றுலா வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை இலக்கம் 2 இன் படி, இலங்கைக்கான மோட்டார் வாகனங்களின் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சரின் முன்மொழிவின்படி, போக்குவரத்துக்காக 250 மினி பஸ்கள் மற்றும் 75 வான்களுக்கு கடந்த 01ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

அதன்படி மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் விசேட வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை சட்டத்தை நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கு பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த பிரேரணைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லை

## வெருகல் படுகொலை நினைவேந்தல்




வெருகல், ஜூன் 13

**ஈச்சிலம்பற்று முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை கொண்டுசென்ற அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டு 38 வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லையென படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கிக் கொண்டுசென்ற போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்ட வெருகல் படுகொலையின் 38 ஆவது நினைவுதினம் நேற்றுப் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச் சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் அரசாங்கத்தால் வெருகல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டு வந்தன.

அந்த வகையில் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை ஏற்றிச் செல்லுமாறு அப்போது மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த வர்ணசூரியவால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் முகாம்களுக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 21 பேர் வண்டில் மாடுகளுடன் வெருகல் நோக்கிச் சென்றனர். அங்கிருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கிச் சென்ற போது மகிந்தபுரவில் வைத்து இராணுவத்தினரால் இவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியிலிருந்து 50 மீற்றர் தூரம் அழைத்துச் செல்லப்பட்டு முழங்காலில் இருக்க வைத்து பின்னர் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மூன்றுபேர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தனர். படுகொலை செய்யப்பட்டவர்களில் இருவர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# இன, மத வேறுபாடின்றி செயல்படுகிறார் ரணில்

## சொல்கிறார் முஷாரப்

காரைதீவு, ஜூன் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன, மத வேறுபாடின்றி நாட்டின் முன்னேற்றத்துக்காக தன்னை அர்ப்பணித்துச் செயல்படுகின்றார் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு தாக்கங்களால் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஜனாதிபதிதான், கட்டம் கட்டமாக முன்னிலைக்கு கொண்டு வருகிறார். அவர் இன, மத, பிரதேச வேறுபாடின்றி நாடு என்ற ரீதியில் பணியாற்றி வருகிறார். அவரது நிர்வாகத்தின் கீழ் நாட்டை முன்னிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நிறுவனங்களுக்கும் நிர்மாணங்களுக்குமாக சுமார் 10 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

இதன் ஒரு கட்டமாக சமூக சேவை நிறுவனங்களுக்கும் விளையாட்டு கழகங்களுக்கும் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)



## சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழு இராமகிருஷ்ண மிஷன் குருகுலம் வருகை

கல்லடி, ஜூன் 13

சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஜெயா வேல்சாமி தலைமையிலே ஆரம்பமான பாதயாத்திரை ஒரு மாத காலத்தை பூர்த்தி செய்துள்ளது.

இந்தக் குழுவினர் திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தை வந்தடைந்தனர்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் சிறீ மத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் விடுத்த அழைப்பை ஏற்று பாதயாத்திரை குழுவினர் அங்கு சென்றனர். (எ)

# ஆட்கடத்தலை எவ்வாறு தடுப்பது?


## காரைதீவில் பயிற்சி பட்டறை

காரைதீவு, ஜூன் 13

ஆட்கடத்தலை எவ்வாறு தடுப்பது? என்பது தொடர்பிலான பயிற்சி பட்டறை நேற்று முன்தினம் காரைதீவில் நடைபெற்றது.

மனித அபிவிருத்தி தாபனம் ஏற்பாடு செய்த இந்தப் பயிற்சிப் பட்டறை அந்த தாபன இணைப்பாளர் பி. சிறிகாந்த் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ. பீ. ஏ. அசீஸ் வளவாளராக செயல்பட, மனித அபிவிருத்தி தாபன கிழக்கு



மாகாண ஆலோசகர் வி. ரி. சகாதேவராஜா தொடக்கவுரையாற்றினார்.

இதில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கோவிட் - 19 தாக்கத்தின் பின்னர் பொருளாதார மற்றும் உணவு நெருக்கடி காரணமாக பெண்கள் அதிகமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வீட்டுப் பணியாளர்களாக சென்றுள்ளனர். இதன் பின்னணியில் பாலியல் சுரண்டல், புலம்பெயர்ந்த பெண் தொழிளாளர்கள் மற்றும் சிறுமிகள் மத்தியில் கட்டாய திருமணம் என்பன தொடர்ந்து ஆட்கடத்தலை துரிதப்படுத்துகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் மனித அபிவிருத்தி தாபனம் தடுத்தல் பாதுகாத்தல் மற்றும் வழக்கு பதிவிடல் உபாயங்களினூடாக ஆட்கடத்தலை எதிர்த்து போராடுவதற்கு பங்களிப்பு செய்தல் திட்டத்தை Global Initiative அனுசரணையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்துடன் ஆட்கடத்தல் செயல்பாடானது சட்டவிரோத செயல்பாடுகளில் ஒன்றாக காணப்படுவதால் இவற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பது எல்லாத்துறையினரினதும் கடமை என்பதுடன் ஒவ்வொரு மனிதனது பொறுப்பாகும் என மனித அபிவிருத்தி தாபன திட்ட இணைப்பாளர் பி. சிறீகாந் தெரிவித்தார். (எ)

# பிரதி பிரதம செயலாளராக அஸ்மி நியமனம்

நிந்தவூர், ஜூன் 13

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) ஏ. எல். எம். அஸ்மி, கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் தரம்-1 அதிகாரியான இவர் பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளராகவும் அக்கரைப்பற்று மாந



கர சபையின் ஆணையாளராகவும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளராகவும் அதன் பதிவாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இறுதியாக கல்முனை மாநகர ஆணையாளராக கடமையாற்றி வந்த நிலையில் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (எ - 06)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமனில் படகு மூழ்கி 49 பேர் உயிரிழப்பு!

## 140 பேரை காணவில்லை

சனா, ஜூன் 13

**சோமாலியா மற்றும் எதியோப்பியாவைச் சேர்ந்த புலம் பெயர்வோரை ஏற்றிக்கொண்டு பயணித்த படகு ஏமன் அருகே கடலில் மூழ்கியதில் 49 பேர் பலியாகினர். 140 பேரை காணவில்லை என்று புலம்பெயர்வோருக்கான ஐ. நா. சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.**



இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சோமாலியாவின் வடக்கு கடற்கரையிலிருந்து சுமார் 260 சோமாலியர்கள் மற்றும் எதியோப்பியர்களை ஏற்றிக்கொண்டு ஏடன் வளைகுடா வழியாக படகு ஒன்று பயணித்தது. இதில் 320 பேர் பயணித்த நிலையில் அந்த படகு, ஏமனின் தெற்கு கடற்கரையில் திங்கட்கிழமை மூழ்கியது. இதில் 49 பேர் உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. 140 பேரை காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. படகில் பயணித்தவர்களில் இதுவரை 71 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய புலம்பெயர்வோருக்கான ஐ. நா. சர்வதேச அமைப்பின் செய்தித்தொடர்பாளர் முகமதலி அபுனஜெலா, "புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்கான மற்றுமொரு நினைவூட்டலாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. அவசரமாக புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண்பதோடு, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது" எனக் கூறினார்.

"பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு புலம்பெயர்வோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏமனில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டுப் போர் நீடித்து வருகின்ற போதிலும் 2021 முதல் 2023 வரை ஆண்டுதோறும் அந்த நாட்டுக்கு வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 27, 000 இலிருந்து 90, 000 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 3,80, 000 புலம்பெயர்ந்தோர் தற்போது ஏமனில் உள்ளனர்" என்று புலம்பெயர்வோருக்கான ஐ. நா. சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# மலாவி துணை ஜனாதிபதி உட்பட 10 பேர் விமான விபத்தில் மரணம்



லிலொங்வே, ஜூன் 13

கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவி நாட்டின் துணை ஜனாதிபதி சவ்லோஸ் சிலிமா விமான விபத்தில் உயிரிழந்தார். அவர் பயணித்த இராணுவ விமானம் விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அவருடன் சென்ற யாரும் உயிர் பிழைக்கவில்லை. இதனை மலாவி நாட்டின் ஜனாதிபதி லாசரஸ் சக்வேரா உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலமாக உரையாற்றிய மலாவி ஜனாதிபதி, இந்தச் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் வருத்தப்படுகிறேன். துணை ஜனாதிபதி சவ்லோஸ் சிலிமா பயணித்த இராணுவ விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. விமானம் காட்டில் விழுந்து நொறுங்கியதில் விமானத்தில் பயணித்த யாரும் உயிர் பிழைக்கவில்லை. இது பெரும் சோகம் என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

மலாவி நாட்டின் துணை ஜனாதிபதி சவ்லோஸ் சிலிமா 9 பேருடன் இராணுவ விமானத்தில் தலைநகர் லிலொங்வேயிலிருந்து சுமார் 370 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மசுஸூசர்வதேச விமான நிலையத்துக்கு புறப்பட்டார். அவர் பயணித்த இராணுவ விமானம் லிலொங்வேயில் இருந்து 45 நிமிடங்களில் மசுஸூ விமான நிலையத்தில் அடைய வேண்டிய நிலையில் அது மாயமாகியது. இந்த நிலையில் விபத்தில் சிக்கி துணை ஜனாதிபதி உயிரிழந்தார். (எ)

# போதைப்பொருள் கடத்திய 7 பேருக்கு மரண தண்டனை

பக்தாத், ஜூன் 13

ஈராக்கில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 7 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஈராக்கில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரிக்க போதைப்பொருள் பயன்பாடே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஏனெனில் அங்கு பயங்கரவாதத்துக்கு நிதியளிக்கும் முக்கிய ஆதாரமாக போதைப்பொருள் வர்த்தகம் உள்ளது. இதனால் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி உத்தரவிட்டார். இதன்படி போதைப்பொருள் பயன்பாட்டை கண்காணிக்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அண்டை நாடுகளில் இருந்து போதைப்பொருள் கடத்திய கும்பலை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் 7 பேருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி பைடனின் மகன் குற்றவாளி என்று தீர்ப்பு



வாஷிங்டன், ஜூன் 13

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹன்டர் பைடன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் துப்பாக்கியைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டங்களை மீறினார் என்பதால் அவர் குற்றவாளி என்று அமெரிக்க நீதிமன்ற தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவரின் குடும்ப உறுப்பினர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை இதுவே முதல்தடவை.

துப்பாக்கியைக் கொள்வனவு செய்த வேளை தான் போதைப்பொருள் பாவனையாளர் இல்லையென ஹன்டர் பொய் கூறியமை தொடர்பில் இரண்டு குற்றச்சாட்டுகளும் போதைப்பொருளுக்கு அடிமையான வேளை துப்பாக்கிகளை வைத்திருந்த ஒரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு கைத் துப்பாக்கியைக் கொள்வனவு செய்த வேளை அரசாங்க ஆவணத்தில் தான் போதைப்பொருளைப் பயன்படுத்தவில்லை. அதற்கு அடிமையாகவில்லை என ஹன்டர் பைடன் தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வேளை கொக்கைய்ன் போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பது பிரதான குற்றச்சாட்டாக எழுந்தது.

அமெரிக்க அரசாங்கத்தின் ஏ. டி. எவ். ஆவணத்தில் பொய்யான தகவல்களை வழங்குவதும் போதைப்பொருளை பயன்படுத்துபவர் துப்பாக்கி வைத்திருப்பதும் அமெரிக்காவில் கடும் குற்றம். இதற்கு 25 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகன் குற்றவாளியே தீர்ப்பை ஏற்கிறேன்!

## அமெரிக்க ஜனாதிபதி



வாஷிங்டன், ஜூன் 13

தனது மகன் குற்றவாளி என்று நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

போதைப் பழக்கத்துக்கு அடிமையான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்த வழக்கில் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

மகன் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ஜோ பைடன், "நான் ஜனாதிபதி, மற்றும் ஒரு தந்தை. தங்களது செல்ல பிள்ளைகள் ஒரு விஷயத்துக்கு அடிமையாகி அதிலிருந்து அவர்கள் விடுபட்டு, மீண்டு வருவதைப் பார்த்து பெருமை கொள்ளும் உணர்வை பல்வேறு குடும்பத்தினர் புரிந்து கொள்வர்.

"இந்த வழக்கின் தீர்ப்பை நான் ஏற்றுக்கொண்டு, நீதிமன்ற வழிமுறைகளுக்குத் தொடர்ந்து மரியாதை கொடுப்பேன். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மகன் ஹன்டர் மேல்முறையீடு செய்யத் திட்டமிட்டுள்ளார் என்றார் பைடன். (எ)

# கிராமத்துக்குள் நுழைந்து இஸ்ரேல் படை தாக்குதல்

காஸா, ஜூன் 13

மேற்கு கரையில் கிராமத்துக்குள் புகுந்து இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, தீவிரவாத தாக்குதல் வழக்கில் தொடர்புடைய சந்தேக நபர்கள் காரில் தப்பிச் செல்ல முயன்றதால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், பலஸ்தீனத்தின் மேற்கு கரையிலும் வன்முறை அதிகரித்துள்ளது. இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல்கள், குடியேறிகளின் வன்முறை மற்றும் தெரு தாக்குதல்கள் காரணமாக அவ்வப்போது உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், மேற்கு கரையின் கபர் நிமா கிராமத்தில் இஸ்ரேல் படையின் நேற்று முன்தினம் அதிரடியாகத் தாக்குதல் நடத்தினர். அந்த கிராமத்தின் அருகே முதலில் ஒரு கார் மீது தாக்குதல் நடத்திய நிலையில், பின்னர் கிராமத்துக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 4 பேர் கொல்லப்பட்டதாகவும், 8 பேர் காயமடைந்ததாகவும் பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன கசிவால் 30 பேர் பாதிப்பு



கொழும்பு, ஜூன் 13

களுத்துறை - பாணந்துறையில் தொழிற்சாலை ஒன்றிலிருந்து ஏற்பட்ட இரசாயன கசிவால் 30 பேர் பாதிக்கப்பட்டனர்.

வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் கலவை தயாரிக்கும் போதே இந்த இரசாயன கசிவு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து குறித்த நிறுவனம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இரசாயனக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஊடகவியலாளர்மீது தாக்குதல்: மன்னிப்பு கேட்ட அதிகாரிகள்!

கொழும்பு, ஜூன் 13

தொப்பி அணிந்து மாவட்ட செயலகத்துக்குள் சென்ற ஊடகவியலாளரை திட்டி தாக்கிய இரத்தினபுரி முன்னாள் மாவட்ட செயலாளர் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி உட்பட 5 பேர் நேற்று உயர் நீதிமன்றத்தில் மரபுப்படி மன்னிப்பு கோரினர்.

முன்னாள் மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோதாகமவே, மாவட்ட செயலக உத்தியோகத்தர் அநுராத பண்டார, மற்றும் ஊடகவியலாளரை தாக்கிய இரத்தினபுரி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி, பொலிஸ் கான்ஸ்டபிள் சமீர, மற்றும் குருவிட்ட இராணுவ முகாமின் இராணுவ கோப்ரல் சேனாநாயக்க ஆகியோரே மன்னிப்பு கோரினர்.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் சரத் விமலரத்ன, 2019 மே 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

மாவட்ட செயலகத்தால் அழைக்கப்பட்ட மேற்படி ஊடகவியலாளர் தொப்பி அணிந்து வளாகத்துக்கு வந்த போது மேற்படி தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தபோதே தாக்குதலுக்கு உள்ளானார்.

அவர் தொப்பி அணிந்து வளாகத்துக்குள் நுழைந்தபோது, கான்ஸ்டபிள் மற்றும் இராணுவ கோப்ரல் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர், பின்னர் அவர் தொப்பியை அகற்றினார். வளாகத்துக்குள் நுழைந்த அவர் மீண்டும் தொப்பி அணிந்திருந்தார்.

பின்னர் அவர் கைது செய்யப்பட்டு மாலை வரை பொலிஸ் நிலையத்தில் மறியலில் வைக்கப்பட்டார்.

இந்த சம்பவத்துக்கு எதிராக நடவடிக்கை கோரியும் இழப்பீடு கோரியும் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதியரசர்கள் முர்து பெர்னாண்டோ மற்றும் மகிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, பிரதிவாதிகள் ஐவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன், மனுதாரரிடம் மன்னிப்பு கோருவதற்கு தயாராக இருப்பதாக நீதிமன்றில் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற மரபுப்பட ஊடகவியலாளரிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், அதன்பிறகு பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க மாட்டோம் என நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ஐ)

# நளின் பண்டார எம். பியின் ஜீப் மோதியதில் இளைஞர் பலி

கொழும்பு, ஜூன் 13

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பயணித்த ஜீப் மோதியதில் 8 நாட்களாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கொழும்பை சேர்ந்த 22 வயது இளைஞரான ஷனுக ரவிந்து என்பவரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் உயிருக்கு போராடிய நிலையில் மூளைச்சாவு அடைந்தார். இதைத் தொடர்ந்து அவரின் உறவினர்கள் இளைஞனின் சிறுநீரகம், கல்லீரலை தானம் செய்ய விருப்பம் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 3ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரை நளின் பண்டார எம். பி. பயணித்த ஜீப் மோதியது. இதில் இளைஞர் படுகாயமடைந்திருந்தார்.

இதேநேரம், எம். பியின் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# மைத்திரிக்கு விதிக்கப்பட்ட தடையை நீடித்தது நீதிமன்று

கொழும்பு, ஜூன் 13

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயல்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராகவும் உறுப்பினராகவும் செயல்படுவதற்கு விதிக்கப்பட்ட தடை எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொதுமக்கள் அச்சமின்றி தண்ணீரை பயன்படுத்தலாம்!

**தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை**

கொழும்பு, ஜூன் 13

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் வழங்கப்படும் தண்ணீர்சுத்தமானது. பொதுமக்கள் அனைவரும் அச்சமின்றி அந்த நீரைப் பயன்படுத்த முடியும் என்று தேசிய நீர் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அனைத்து நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் நீரின் சுகாதார தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் அங்கு தொடர்ந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால், பொதுமக்கள் அனைவரும் அச்சமின்றி தண்ணீரை பயன்படுத்த முடியும் எனவும் நீர் விநியோகம் தொடர்பில் பிரச்னைகள் இருக்குமாயின், 1939 என்ற தொலைபேசி இலக்கத்துக்குஅறிவிக்குமாறும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 13

கரையோர மார்க்கத்தில் நேற்று புதன்கிழமை காலை ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

கட்டுகுருந்தை ரயில் நிலையத்துக்கு அருகில் காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சாகரிகா ரயிலில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கரையோர மார்க்கத்தில் ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

# தாமரை பூ பறிக்கச் சென்ற மாணவன் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 13

வாவியில் தாமரை பூ பறிக்கச் சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

மொனராகலை, எத்திமலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 9 வயது சிறுவனே உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவன் பாடசாலை நிறைவடைந்த நிலையில், மூன்று நண்பர்களுடன் இணைந்து தாமரை பூ பறிப்பதற்காக தொரஅத்துபிட்டிய வாவிக்கு சென்றுள்ளார்.

இதன்போது இந்த மாணவன் வாவிக்கு அருகில் இருந்த கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

மாணவன் நீண்ட நேரமாகியும் பாடசாலையில் இருந்து வீடு திரும்பாததால் மாணவனின் பெற்றோர் மாணவனைத் தேடிச் சென்றனர்.

தகவல்களின் அடிப்படையில் சிறுவன் விழுந்த கிணற்றை சென்று பார்த்த அவர்கள் சிறுவனை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருதுத்துவர்கள் தெரிவித்தனர்.

# வயலுக்கு வழங்கிய மின்சாரம் இளைஞரின் உயிரைப் பறித்தது!

கொழும்பு, ஜூன் 13

விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க வயலில் இணைக்கப்பட்ட சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பொலநறுவை - வெலிக்கந்தையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 19 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இந்த இளைஞன் இருவருடன் வயலுக்கு சென்றபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

வெலிக்கந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரூ. 3.5 கோடி நகைகள் திருட்டு சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 13

நகைக் கடை ஒன்றை உடைத்து நகைகள், மாணிக்க கற்கள் மற்றும் வெளிநாட்டு பணத்தை திருடிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை - தங்காலையில் கடந்த 24ஆம் இடம்பெற்ற திருட்டு சம்பவத்தில் 3 கோடியே 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள், மாணிக்க கற்கள், வெளிநாட்டு பணம் என்பன திருடப்பட்டன.

தங்காலை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டையை சேர்ந்த 22, 23, 27 வயது நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலய...

வலிகாமம், வடமராட்சி, தென்ம ராட்சி, தீவகம் என ஐந்து கல்வி வலயங் களின் பணிமனைகள் முன்பாகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் "இலவச கல்வியை தனியார் மயப்படுத்தாதே", "அரசே மாணவர்களின் கல்வி உரிமையில் கை வைக்காதே", "அரசே மாணவர்களின் போசாக்கு நிலையை உறுதிப்படுத்து", "அரசே அதிபர், ஆசிரியர்களின் எஞ்சிய 2/3 பங்கு சம்பளத்தை வழங்கு", "அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்கு", ஆகிய கோரிக்கைகளை கோஷமாக எழுப்பியதுடன், அவை குறித்து எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

(ஐ-01-02)

## 15முக்கிய...

இதனைத் தெரிவித்தார்.

மேலும், "நமது நாட்டின் நீதித் துறைக் கட்டமைப்பில், நீதியை நிலை நாட்டுதல் தொடர்பான மிகப் பெரும் சட்ட மறுசீரமைப்புகள் நடைபெற்ற காலமாக இக்காலகட்டத்தைக் குறிப்பிடலாம். கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இது நாட்டில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பதை குறிப்பிட வேண்டும்.

தற்போது காதி நீதிமன்றம் தொடர்பாக பல பிரச்னைகள் எழுந்துள்ளன. அதன்படி, இரண்டு மாற்றங்களை செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. இதேபோன்று, வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை கையாளும் வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை செயல்படுத்துவதற்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அண்மையில் நிறைவேற்றப்பட்ட நீரியல் சட்டத்தை அடுத்த ஆண்டு அமுல்படுத்தலாம். இதன்மூலம் இந்நாட்டின் கடல் எல்லைகள் வழியாக பயணிக்கும் கப்பல்கள் மூலமாக 50 மில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தைப் பெறமுடியும்." என்றார்.

(ஐ)

## ஈஸ்டர்...

குழுவில் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரநிலை அதிகாரியான கே. என். கே. சோமரத்ன, சிரேஷ்ட சட்டத்தரணி டபிள்யூ. எம். ஏ. என்நிஷேன் ஆகியோரும் உள்ளனர். இந்த விசாரணைக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி ஆலோசகர் சாரதாஞ்சலி மனோகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வு சேவை, தேசிய புலனாய்வு பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் என்ன? அதற்கு அமைவாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்பன குறித்து ஆராயப்படவுள்ளது.

மட்டக்களப்பு - வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்களால் கொல்லப்பட்டனர் என்பதை இராணுவ புலனாய்வு சபை, குற்றப் புலனாய்வு பிரிவு என்பன நான்கு மாதங்களாக நம்பியிருந்தமைக்கான காரணம் என்ன? மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணைகளில் தெரியவந்த தகவல்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக இந்தக் குழு ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## டிப்பர்...

மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 34 வயதான குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த நபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இளம் மருத்துவர்...

தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக மருத்துவரின் உறவினர் ஒருவர் மருத்துவமனை நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார். இதையடுத்து, அவரின் விடுதியை திறந்த போது மருத்துவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

அதிகளவான மயக்க மருந்தை உடலில் செலுத்திக் கொண்டமையே மரணத்துக்குக் காரணமென பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபை வாசுதேவா மேற்கொண்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-02)

## நாட்டின்...

மருந்து, உரம், எரிவாயு, எரிபொருள் என்று வரிசைகளில் நிற்க நேரிடும் - என்றும் கூறினார்.

பொருளாதார மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடல் கொழும்பு - பத்தர முல்லையில் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்னைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்கு காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துக் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் யுத்தத்துக்கும் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் யுத்தத்துக்கு பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாத வேளையில் கடன் பெற்றுக் கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமல் போனது.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அதற்கான பணிகளை செய்யும் போது நாட்டை விற்கப் போவதாக பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்குரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமான தேவையை கருத்தில் கொண்டு 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் வரி அதிகரிப்பு செய்ய வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

# மன்னார் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் அரசின் திட்டங்களுக்கு கடும் எதிர்ப்பு

மன்னார், ஜூன் 13

மன்னார் மாவட்டத்தில் 2ஆம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை செயல் திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வுகளுக்கு எதிராக நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளை தெரிவித்திருந்தனர்.

எனினும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் எவ்வித அனுமதியும் வழங்கப்படாமல் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் அபிவிருத்தி குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.திலீபன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசப்பட்டன.

குறிப்பாக, மன்னார் தீவு பகுதியில் 2ஆவது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோது பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, மீனவர் அமைப்புகள், பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

மன்னார் தீவுக்குள் கனிய மணல் அகழ்வு அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகள் இனி நடைபெறக்கூடாது என பல முறை தெரிவிக்கப்பட்ட போதும், இந்த அகழ்வு தொடர்பாக அபிவிருத்தி குழு கூட்டத்தில் கதைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மேலும், கடந்த அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது காற்றாலை மின் செயற்றிட்டம் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தபோதும் இதுவரை எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்படக்கூடாது என்பதே அனைவரினதும் கோரிக்கை. எனினும், கனிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தை அழைத்து கலந்துரையாடியமையை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இந்த விடயத்தை திரும்பத் திரும்ப கதைப்பதில் அர்த்தம் இல்லை. அதற்கான அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வழங்காத நிலையில், கொழும்பில் அனுமதி வழங்குவதாக இருந்தால் இந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் எதற்கு என்றும் அவ்வாறு கொழும்பில் அனைத்துக்கும் அனுமதி வழங்கினால் இனிமேல் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றும் இனிமேல் நடத்த வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், பல்வேறு விடயங்கள் குறித்து அங்கு ஆராயப்பட்டது. இந்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், முப்படையினர், பிரதேச செயலாளர்கள், வட மாகாண திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## 13ஆவது...

தற்போதுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள பல அதிகாரங்களை மத்தி எடுத்துக் கொண்டது. 1992ஆம் 58ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மாகாணத்தின் கீழிருந்த அரச அதிபர், பிரதேச செயலர்கள், கிராம சேவகர்களை மத்திய அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. எனவே, தற்போதுள்ள 13ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கு தீர்வல்ல. ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் ஏற்கமுடியாது. தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வே எமக்கு தேவை என்று தான் சஜித் பிரேமதாஸவிடம் கூறினார் என்று விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்தார். (ஐ)

## பொது...

ஈடுபடாமல் இருந்தால் அரசியல் வாதிகளை கட்டுப்படுத்தலாம்.

இனப்படுகொலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு சர்வ தேச விசாரணை இல்லை, புலம் பெயர்ந்தோர் சுதந்திரமாக தொழில் முயற்சிகளில் ஈடுபட நிதி அதிகாரம் இல்லை. இப்போதும் கட்டமைக்கப் பட்ட இனவழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையில்தான் பொது வேட்பாளரின் தேவை உணரப் படுகின்றது. இங்கு பொது வேட்பாளர் தான் முக்கியம். வாக்கு என்பது முக்கியமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வடக்கிலுள்ள கட்சித் தலைவர்களின் வீடுகளுக்கு வந்து ஆதரவு கேட்கிறார்கள். இப்போது நாம் பலமாக உள்ளோம். இந்த சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்குமா தெரியாது. இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# சுயாதீனமாக ரணில் போட்டி!

கொழும்பு, ஜூன் 13

யார் எதனை கூறினாலும் உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடாமல், சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவாரென கொலன்னாவையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் கூறினார்.

ரணிலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிப்பதாகவும் மேலும் பல கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக பேச்சு நடத்தி, அதில் வெற்றியடைந்துள்ளதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

## போர்...

கல்லூரிகளில் ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில் உரையாற்றிய அவர்,

"வடக்கு மாகாணத்தில் மக்களை மையப்படுத்திய மிகப்பெரிய அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றது. இது மக்களை முன்னிலைப்படுத்திய பங்கேற்பு அபிவிருத்தியின் ஒரு வடிவமாக அமையும். இதன் மூலம் கிராமத்தை கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பக்க பலம் கிடைக்கும்.

"இதற்கு, அறிவு சார்ந்த பொருளாதாரம், ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர வேண்டும். தகவல் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்த தேசிய வேலைத் திட்டத்தின் தேவைப்பாடு நாட்டில் இன்று எழுந்துள்ளது.

"யாழ். மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் பூங்காக்களை அமைத்து, அபிவிருத்தியை நடைமுறை ரீதியாக முன்னெடுப்போம். இதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும்." - என்றும் கூறினார்.

(ஐ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பிபில-மஹியங்கனை வீதியில் விபத்து: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி!

கொழும்பு, ஜூன் 13

பதுளை பிபில - மஹியங்கனை வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

வாகம பகுதியில் நேற்று புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வான் ஒன்றும் தனியார் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதியதில் விபத் சம்பவித்துள்ளது.

மேலும் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

### புலி உறுப்பினருக்கு உதவிய குற்றச்சாட்டு:

## முன்னாள் சுங்க அதிகாரி யோகநாதன் விடுதலை!

கொழும்பு, ஜூன் 13

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு உதவியதாக தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியிருந்த முன்னாள் சுங்க அதிகாரி கந்தையா யோகநாதன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் புலனாய் வுப் பிரிவின் உறுப்பினரான கதிர் காமநாதன் மகிந்தன் அல்லது வெண்ணயனன் என்பவருக்கு உதவி யதாகத் தெரிவித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

எனினும், இந்த வழக்கில் இருந்து முன்னாள் சுங்க அதிகாரி கந்தையா யோகநாதனை விடுதலை செய்து நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தமக்கு எதிராக பொலிஸ் அத்தியட்சகரிடம் வழங்கிய வாக்குமூலம் சுயாதீனமான வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், குற்றச்சாட்டை நிரூபிக்க வேறு சுயாதீனமான சாட்சியங்கள் இல்லாமை என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், முதல் வழக்கில் அவரை விடுதலை செய்வதாக நீதி பதி சுட்டிக்காட்டினார்.

2010 டிசம்பர் 31 அன்று சட்டமா அதிபர், மேற்கூறிய குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தனியான வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கின் போது, குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலம் சுதந்திரமானதல்ல என முதற்கட்ட ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது, அப்போது வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி விசாரணையை மேற்கொண்டு பூர்வாங்க ஆட்சேபனையை நிராகரித்து விசாரணையைத் தொடங்கினார்.

பிரதிவாதிகளின் ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்ததற்கு எதி ராக தாக்கல் செய்யப்பட்ட மறு சீராய்வின் தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் ஏற்றுக்கொள்ள முடியாதது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தின் தீர்ப்பின் பிரகாரம் வழக்கை தொடர சட்டரீதியாக சாத்தியமில்லை என பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி காலிங்க இந்த திஸ்ஸ உயர்நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பிரதிவாதிக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் எத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டை முன் வைத்தாலும், சாட்சியங்கள் மற்றும் முறையான விசாரணையில் குற்றச் சாட்டை நிரூபிக்காமல் எந்தவொரு பிரதிவாதியையும் தண்டிக்க நீதிமன்றத்திற்கு சட்டபூர்வ அதிகாரம் இல்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக் காக சட்டத்தரணிகளான ரஷ்மினி இந்ததிஸ்ஸ, கிங்கினி நெல்சன் விலத்கமுவ, நிரோஷன் சிறிவர்தன, நெரஞ்சன் எரியகொல்ல, மலிந்த ஜயசிங்க மற்றும் வசீம் அக்ரம் ஆகியோருடன் சிரேஷ்ட ஜனாதி பதி சட்டத்தரணி காலிங்க இந்த திஸ்ஸ முன்னிலையாகியிருந்தார்.

இதனிடையே, பிரதிவாதிக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை யும் நீக்கிய நீதிபதி, அவரது கடவுச்சீட்டை பிரதிவாதிக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு நீதிபதி நவரத்ன மாரசிங்க தனது தீர்ப்பில் வலியுறுத்தியுள்ளார். (அ)

### நினைவேந்தல் விவகாரம்:

# நிபுணர் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 13

**இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூறுவது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.**

சிரேஷ்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் டி. சனாதனன், கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பர்ஸானா ஹனீபா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதான ராச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

22-05-2023 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

1983-2009 காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றினால் உயிரிழந்த பொதுமக்கள், ஆயுதப் படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாட்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

இந்த பொதுமக்கள் அமர்வுகள் அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தேசிய ஒருங்கிணைப்பு அதிகாரிகளினால் ஒருங்கிணைக்கப்பட்டன.

பங்குபற்றிய மக்களுக்கு தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தமது அபிலாஷைகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின் போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த சந்திப்புகளின் போது முன்வைக்கப்பட்ட பரந்த அளவிலான யோசனைகளை பரிசீலித்த பின்னர் இந்தக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இலங்கையின் மோதல்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் உருவான கலை மற்றும் கலாச்சார வெளிப்பாடுகளை பாதுகாத்து வைக்கும் குறியீட்டு ரீதியிலான கட்டமொன்றை அமைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக கூட்டு அர்ப்பணிப்பை உறுதி செய்வதும் அனைத்து இலங்கையர்களிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

குழுவின் அறிக்கையைக் கையளித்த போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் உடன் இருந்தார். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 500 வைத்தியர், 400 தாதியர் பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 500 வைத்தியர்களுக்கும் மற்றும் 400 தாதியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 1700 வைத்தியர்கள் பணி புரிந்தாலும் மேலும் 500 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் 3300 தாதியர்கள் பணி புரிந்தாலும் மேலும் 400 பேருக்கு பற்றாக்குறை நிலவுவதாக பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தேசிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, இருதய நோய்ப்பிரிவு, நரம்பியல் பிரிவு, அவசர சிகிச் சைப் பிரிவு போன்றவற்றிற்கு வைத்தியர் பற்றாக்குறை அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு நாளாந்தம் 2500 நோயாளர்கள் சிகிச்சை பெற வருகை தந்தாலும் குறித்த பிரிவில் 30 வைத்தியர் கள் மாத்திரமே உள்ளதாக பெல்லன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நோயாளரை பரிசோதனை செய்வதற்காக சாதா ரணமாக 20 நிமிடங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை இருந் தாலும் கூட அவ்வாறு செயற் படின் ஆறு மணித்தியாலத்திலுள் வைத்தியர் ஒருவ ருக்கு 18 நோயாளர்களை மாத்திரமே பரிசோதிக்க முடியும் என அவர் எடுத்துக் காட்டினார்.

இலங்கைத்தீவில் 4000 வைத்தியர்களும் தேசிய வைத்தியசாலையின் 400 தாதியர்களும் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

பற்றாக்குறையாக உள்ள இடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யாமையினால் சுகாதாரத் துறையில் மேலும் நெருக் கடிகள் அதிகரிக்கும் என்று தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் ஐ.தே.கவுக்கு அதுவே இறுதிக்காலம்!

கொழும்பு, ஜூன் 13

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் நடத்தப்பட வேண்டிய தேர்தலை ஒத்திவைக்க முயற்சி செய்தால், அது ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதிக் காலமாக அமையலாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது என தெரிவித்த மகிந்த ராஜபக்ச அவ்வாறான முட்டாள்தனமான வேலையை செய்வார் என தான் நினைக்கவில்லை எனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அது தொடர்பில், ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மகிந்த இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக சரியான நேரத்தில் வேட்பாளரை முன்நிறுத்துவதாகவும், கட்சியிலிருந்து சிலர் விலகிச் செல்வதால் கட்சிக்கு எந்தவித குறையும் ஏற்படாது என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கிடையே நிச்சயமாக நடத்த வேண்டும். எனினும் தேர்தலை ஒத்திவைக்க ரணில் தரப்பினர் தயாராகி வருவதாக பல தரப்புகளில் பேசப்பட்டு வருகின்றன.

எனினும் இது சட்டரீதியாக அமுல்படுத்துவது கடினம் என்பதால் இதனை பல தரப்பினரும் எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.